## பத்தாம் வகுப்பு அரையாண்டுத் பொதுத்தேர்வு – 2018-19
## சமூக அறிவியல் - விடைக்குறிப்புகள்

**சரியான விடை**

1. அ. பீகிங்
2. அ. ஹொலிகோலாந்து
3. ஈ. மின்னல் போர்
4. ஆ. சுவாமி விவேகானந்தர்
5. அ. டாக்டர் 1991
6. ஆ. அமைதி
7. ஈ. வியாபாரிகள்
8. ஈ. நீலகிரி குன்று
9. ஆ. பூனா
10. இ. வண்டல் மண்
11. அ. வான்வழி
12. அ. மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்
13. ஆ. 1991
14. ஆ. கலப்பு பொருளாதாரம்

**பொருத்துக**

15. (i)

அ. பிரெஞ்சு அரசியல்வாதி
ஆ. எப்.டி.ரூஸ்வெல்ட்
இ. தலைவர்
ஈ. கான் அப்துல் காபர்கான்
உ. ஈ.வே. ராமசாமி பெரியார்

15. (ii)

அ. மேற்கு வங்காளம்
ஆ. விழிஞ்சம்
இ. பசுமை வீடு
ஈ. சல்பர்-டை-ஆக்ஸைடு
உ. செயற்கைக்கோள்

### 2 மதிப்பெண் வினாக்கள்

16. **ஏகாதிபத்தியம்**

1. ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.
2. ஒரு நாடு தன் நாட்டின் ஆட்சியை மற்றொரு நாட்டின் மீது திணித்தல்.
3. ஒரு நாடு மற்றொரு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களை கையகப்படுத்தி அந்நாட்டின் இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்ளுதல்.

17. **சர்வதேச சங்கத்தின் அங்கங்கள்**

1. பொதுச்சபை
2. செயலகம்
3. சர்வதேச தொழிலாளர் அமைப்பு
4. நிர்வாக சபை
5. சர்வதேச நீதிமன்றம்

18. **தேசிய தொழில் மீட்புச் சட்டம்**

1. தொழிற்சாலைகளில் சம்பள உயர்வு, பணி நேரக் குறைப்பு.
2. அமெரிக்க அதிபர் பிராங்களின் ரூஸ்வெல்ட் அவர்களால் கொண்டுவரப்பட்ட புதிய பயனுரிமை கொள்கையில் பொருளாதார பெருமந்தத்தை சரி செய்ய உதவியது

19. **அழித்து பின்வாங்கும் கொள்கை**

1. இரண்டாம் உலகப் போரில் இரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையே நடைபெற்ற போரில் இரஷ்யர்கள் பின்பற்றியக் கொள்கை அழித்து பின்வாங்கும் கொள்கை ஆகும்.
2. இக்கொள்கை மூலம் பயிர்கள், பாலங்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருக்க தாங்களே தீயிட்டு அழித்துக் கொண்டு முன்னேறினர்.
3. இரஷ்ய தலைநகர் மாஸ்கோவை கைப்பற்றிய ஜெர்மனிய படைகளுக்கு எதுவும் கிடைக்காததால் ஜெர்மனிக்கு தோல்விமுகம் ஏற்பட்டது.

20. **புரட்சி ஏன் இந்தியா முழுவதும் பரவவில்லை**

1. புரட்சி இந்தியா முழுவதும் பரவாமல் வட இந்தியாவில் மட்டுமே நடைபெற்றது.
2. இந்திய மன்னர்களும், ஜமீன்தார்களும் இப்புரட்சியில் பங்கேற்கவில்லை.
3. புரட்சியை ஆதரிக்காத இந்திய அரசர்கள் நடுநிலை வகித்தனர்.
4. படித்த இந்தியர்கள் இப்புரட்சியை ஆதரிக்கவில்லை.

21. **தியோசோபி**

1. “தியோஸ்” என்றால் கடவுள் என்றும் “சோபஸ்” என்றால் அறிவு என்றும் பொருள்படும்.
2. ஆகவே தியோசோபி என்றால் “கடவுளைப் பற்றிய அறிவு” என்று பொருள்படும்.

22. **மவுண்ட் பேட்டன் திட்டம்**

1. 1947 ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் வெளியிட்ட திட்டம் ஆகும்.
2. அதன்படி இந்தியா, பாகிஸ்தான் என இரு நாடுகளாக பிரிக்கப்பட்டன.
3. இதனை காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் ஏற்றுக் கொண்டன

23. **வீரத்தமிழன்னை**

1. தர்மாம்பாள்
2. தமிழ் மொழிக்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி **"வீரத்தமிழன்னை"** பட்டம் வழங்கப்பட்டது.

**24. சார்க் பரஸ்பர நல்லுறவு**

1. போக்குவரத்து
2. கடிதசேவை
3. சுற்றுலா
4. வாணிபம்
5. சுகாதாரம்
6. வேளாண்மை மற்றும்
7. தகவல் தொடர்பு போன்றவற்றில் சார்க் நாடுகள் தங்களுக்குள் பரஸ்பர நல்லுறவு கொண்டுள்ளன

**25. மக்களாட்சி – வகைகள்**

1. மக்கள் அதிகாரம்.
2. **மக்களாட்சி முறை** இரண்டு வகைப்படும் அவை **1. நேரடி மக்களாட்சி 2. மறைமுக மக்களாட்சி** என்பதாகும்.

**26. இந்தியாவின் வடக்கு மலையிலுள்ள புனித தலங்கள்**

1. அமர்நாத்
2. கேதார்நாத்
3. பத்ரிநாத்
4. வைஷ்ணவி தேவி கோவில்.

27. **மிக அதிக மழை பெறும் பகுதி**

1. கிழக்கு இமயமலையின் தெற்கு சரிவு.
2. அஸ்ஸாம்
3. மேற்கு வங்காளம்.
4. கொங்கணம்
5. மலபார் கடற்கரை.

28. **செழுமை மண்ணின் சத்துப் பொருட்கள்**

**மிக நுண்ணிய சத்துக்கள்**

கந்தகம், குளோரின், செம்பு, மாங்கனீசு, இரும்பு, கோபால்ட், துத்தநாகம்

**பெரிய சத்துப் பொருட்கள்**

நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்பேட்டுகள்

29. **இந்திய வேளாணமை சவால்கள் (ஏதேனும் இரண்டு)**

1. இந்திய வேளாண்மை ஒரு பருவக் காற்றின் சூதாட்டம் என வர்ணிக்கப்படுகிறது. சீராகவும், குறித்தக்காலத்திலும் வீசுவதில்லை.
2. பெருகிவரும் சாலைகள், ரயில் பாதைகள், கட்டுமானப் பணிகள், மழை நீரோட்டம் தடைபடுவதோடு வடிகால் அமைப்பில் நீரோட்ட தடை ஏற்படுவதால் பயிர்கள் பயிரிடுவதில் தாமதம் ஏற்படுகிறது.
3. தொழிற்சாலைகள், குடியிருப்பு கட்டிடங்கள் போன்றவை கட்டப்பட்டு வருவதால் வேளாண் நிலங்களின் பரப்பு குறைந்துக்கொண்டே வருகிறது.
4. உலகளவில் உள்ள காலநிலையானது, நேரடியாகவும் மறைமுகமாகவும் பயிர்கள், மண், கால்நடைகள் மற்றும் பூச்சிகள் போன்றவற்றால் வேளாண்மை பாதிப்படைகிறது.
5. வேளாண் உற்பத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை சீர்கேடு அடைய செய்கின்றன.

30. **வேளாண் சார்ந்த தொழிலகங்கள்**

1. வேளாண் பொருட்களைக் சார்ந்த தொழிலகங்கள்
2. எ.கா.

| | | |
|---|---|---|
| அ. பருத்தி | - | பருத்தி ஆலைகள். |
| ஆ. சணல் | - | சணல் ஆலைகள். |
| இ. கரும்பு | - | சர்க்கரை ஆலைகள். |

31. **ஒலி மாசடைதல்**

1. வாகன ஒலிப்பான்களின் ஒலி அளவை குறைக்கலாம்

2. பொது இடங்களில் ஒலிப்பெருக்கியில் ஒலியைக் குறைக்கலாம்

32. **மக்கள் தொடர்பு சாதனங்கள்**
1. தொலைக்காட்சி
2. வானொலி
3. செய்தித்தாள்கள்
4. இணையவழி

33. **பேரிய** அபாய நேர்வு குறைப்பின் அம்சங்கள்
1. தணித்தல்
2. ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பு
3. பேரிடர் வரும்முன் தயார் நிலை
4. மீட்பு

34. **தலா வருமானம்**
1. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளக்க பயன்படும் கருவி தலா வருமானம்.
2. நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு தலா வருமானம் ஆகும்.
3. தலா வருமானம் = $\frac{\text{மொத்த நாட்டு வருமானம்}}{\text{மொத்த மக்கள் தொகை.}}$

35. **பன்னாட்டு நிறுவனங்கள்**
1. பல நாடுகளில் தங்களது தொழில் நிறுவனங்களை தொடங்கி நடத்தி வரும் அமைப்புகள் பன்னாட்டு நிறுவனங்களாகும்.
2. எ.கா. ஹோண்டா, சுசுகி

## வேறுபாடுகள் (ஏதேனும் 2 மட்டும்)

36.

| டெல்டா | கழிமுகம் |
|---|---|
| ஆற்றின் முகத்துவாரத்தில் காணப்படும் முக்கோண வடிவிலான வண்டில் படிவுகள் | ஆற்று முகத்துவராத்தில் ஓதங்களின் காரணமாக ஆற்றின் நல்ல நீரும் கடலின் உப்பு நீரும் கடலில் ஒன்றாக கலக்குமிடம் |
| எ.கா. காவிரி, கங்கை | எ.கா. நர்மதை, தபதி |

37.

| காற்று மோதும் பக்கம் | காற்று மோதாப் பக்ம் |
|---|---|
| காற்று வீசும் திசையை நோக்கிய மலைச்சரிவு | காற்று வீசும் திசைக்கு மறைவான பகுதி |
| அதிக மழைப்பொழிவை பெறுகிறது | மிகக் குறைந்த மழைப்பொழிவுப் பெறுகிறது |
| எ.கா : மும்பை ஆண்டுக்கு 150 செ.மீ மழைப் பொழிவை பெறுகிறது. | எ.கா. பூனே ஆண்டுக்கு 50 செ.மீக்கு குறைவான மழைப் பொழிவை பெறுகிறது. |
| ஈரப்பதம் அதிகம் உள்ள காற்று வீசும் | வறண்ட காற்று வீசும் |

38.

| வெப்பமண்டல பசுமை மாறாக்காடுகள் | வெப்பமண்டல பருவக்காற்று காடுகள் |
|---|---|
| மழைபொழிவு 200 செ.மீ. மேல் காணப்படும் | 70 முதல் 200 செ.மீ வரை மழைபொழிவு காணப்படும். |
| கோடை காலத்தில் இலைகளை உதிர்ப்பதில்லை | கோடை காலத்தில் இலைகளை உதிர்க்கும் |
| ரோஸ் மரம், ரப்பர், மூங்கில், சின்கோனா மரங்கள் காணப்படுகின்றன | தேக்கு, சால், சந்தன மரம், வேப்ப மரம் போன்ற மரங்கள் காணப்படுகின்றன. |
| அதிக வெப்பம், அதிக மழை உள்ள பகுதிகளில் காணப்படும் | அதிக வெப்பம், மிதமான மழை உள்ள பகுதிகளில் காணப்படும் |
| பசுமைத மாறாக் காடுகள் என்றழைக்கப்படும் | இலையுதிர்க் காடுகள் என்றழைக்கப்படும். |

39.

| உணவுப் பயிர்கள் | பணப்பயிர்கள் |
|---|---|
| குடும்ப தேவைக்காக உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்வதாகும் | வணிக தேவைக்காக உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்வதாகும் |
| குறைந்த அளவு உற்பத்தி செய்யப்படுகிறது | அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது |
| எ.கா. நெல், கோதுமை | எ.கா. கரும்பு, தேயிலை, பருத்தி, தானியங்கள் |
| உள்நாட்டு சந்தையைப் பூர்த்தி செய்கிறது | அந்நிய செலவாணியை ஈட்டித் தருகிறது |

40.

| காற்று மாசடைதல் | ஒலி மாசடைதல் |
|---|---|
| காற்றில் கலக்கும் பொருட்களால் மாசடைகிறது | அளவுக்கு அதிகமாக தேவையற்ற சப்தத்தினால் ஒலி மாசடைகிறது |
| வாகனங்கள் மற்றும் தொழிற்சலைகளிலிருந்து வெளியேறும் புகையால் ஏற்படுகிறது | இயந்திரங்கள், வாகனங்கள் ஏற்படுத்தும் சப்தத்தினால் ஏற்படுகிறது |
| மனிதர்களுக்கு சுவாசக் கோளாறு, இதய நோய், நுரையிரல் நோய் ஏற்படுகிறது | மனிதர்களுக்கு மன அழுத்தம், படபடப்பு, கேட்கும் திறன் பாதிப்பு உருவாகிறது. |
| இயற்கையால் மற்றும் மனிதர்களால் காற்று மாசடைகின்றன. | மனிதர்களால் மட்டும் ஒலி மாசடைகிறது. |
| எ.கா. எரிமலை வெடிப்பு, வாகனப் புகைகள், அணுமின் நிலைய புகை, தொழில்சாலை புகை | எ.கா. விமானம், ரயில் சப்தங்கள், ஒலிபெருக்கி சப்தம், வண்டி ஹாரன் சப்தம் |

41.

| தேசிய நெடுஞ்சாலைகள் | மாநில நெடுஞ்சாலைகள் |
|---|---|
| மாநில தலைநகரங்களை தேசிய தலைநகருடன் இணைக்கின்றன. | மாவட்ட தலைநகரங்களை மாநில தலைநகரோடு இணைக்கின்றன. |
| இவற்றை மத்திய பொதுப்பணித் துறை பராமரித்து வருகிறது | இவற்றை மாநில பொதுப்பணித் துறை பாராமரித்து வருகிறது |
| 7,07,548 கி.மீ. நீளம் உடையது | 1,31,899 கி.மீ. நீளம் உடையது. |
| தமிழ்நாடு – கேரளாவை இணைக்கும் 650 கி.மீ. சாலை | கடலூர் - சித்தூர் சாலை |

42

| தொலைபேசி | கைபேசி |
|---|---|
| ஓர் இடத்தில் நிலையாக இருக்கும் | எங்கும் எடுத்துச் செல்லலாம் |
| அளவில பெரியது | அளவில் சிறியது |
| இணையம் பார்க்க முடியாது | இணையம் பார்க்கலாம் |
| முகம் பார்த்து பேச முடியாது | முகம் பார்த்து பேசலாம் |

43.

| வாகன தொழிலகம் | மென்பொருள் தொழிலகம் |
|---|---|
| இது கனிம வளம் சார்ந்த தொழிலகம் ஆகும். | இது கனிம வளம் சார்ந்த தொழிலகம் அல்ல |
| நம் நாட்டில் மும்பை, சென்னை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. | நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களில் காணப்படுகிறது. |
| தொழிலாளர்களின் உழைப்பு அதிகம் தேவைப்படுகிறது | இளம் பொறியியல் வல்லுநர்கள் தேவைப்படுகின்றார்கள் |
| எ.கா. ஹோண்டா, சுசுகி, ஹீரோ, மாருதி | விப்ரோ, எச்பி, எச்பிஎல், இன்போசிஸ் |

தலைப்பு வினாக்கள்

44. **முதல் உலகப்போர்**

அ) முதல் உலகப்போர் 1914 ஆம் ஆண்டு சூலை 28 ம் நாள் தொடங்கி 1918 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் நாள் முடிவுற்றது.

ஆ) மைய நாடுகள் - இத்தாலி, ஜெர்மனி, துருக்கியும், நேச நாடுகள் - இங்கிலாந்தும், ரஷ்யா,பிரான்சு

இ) ருமேனியா, ஜெர்மனி, இங்கிலாந்து

ஈ) பாரீசில் நடைபெற்ற அமைதி மாநாட்டின் மூலம் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது

45. **அடால்ப் ஹிட்லர்**

**அ)** ஆஸ்திரியா

**ஆ)** நாசிக் கட்சி (தேசிய சமதர்மவாதிகள் அமைப்பு)

**இ)** ஹிட்லரின் ஆதரவாளர்கள் தேசிய சமதர்ம வாதிகள் என்று அழைக்கப்பட்டனர்

ஈ) கெஸ்டபோ

46. **இராமலிங்க அடிகள்**

**அ)** உயிர்வகளிடத்தில் அன்பு

**ஆ)** வள்ளலார்

**இ) ஏழைகளின் பசியைப் போக்க**

**ஈ) திருவருட்பா**

47. **சி. இராஜகோபாலாச்சாரி**

**அ)** தொரப்பள்ளி, 1878 டிசம்பர் 10

**ஆ)** சுதந்திரா கட்சி
**இ)** சக்கரவர்த்தி திருமகள், வியாசர் விருந்து
**ஈ)** அரசியல் தந்திரம்

5 மதிப்பெண் வினாக்கள்

48. (அ) **ஏகாதிபத்தியத்தின் விளைவுகள்**

**சாதகமான விளைவுகள்**

1. குடியேற்ற நாடுகளில் போக்குவரத்து, தொலை தொடர்பு துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
2. புதிய விவசாய முறைகளை கையாண்டு உணவு பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தன.
3. கல்வி, மருத்துவம் மற்றும் சுகாதார துறைகளை மேம்படுத்தின.
4. குடியேற்ற நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தின.
5. நாடுகளில் அமைதி, கட்டுப்பாடு மற்றும் ஒற்றுமை வளர்த்தன.

**பாதகமான விளைவுகள்**

1. குடியேற்ற நாடுகள் சுதந்திரத்தை இழந்தன.
2. அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.
3. குடியேற்ற நாடுகள் சந்தைகளாக விளங்கின.
4. இனவேறுபாட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன.
5. வேலையின்மையும் ஏழ்மையும் அதிகரித்தன.
6. பாரம்பரிய கலாச்சாரம் அழிந்து மேற்கத்திய கலாச்சாரம் அறிமுகமானது
7. அடிமை வியாபாரத்தினால் ஆப்பிரிக்க இனங்கள் மறைந்தன.

(ஆ) ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்

**1. பன்னாட்டு பிரச்சனை**

பல்வேறு பன்னாட்டு பிரச்சனைகளுக்கு அமைதியான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு கண்டுள்ளது.

**2. போர் முடிவுக்கு வரல்**

1. இஸ்ரேல் - பாலஸ்தீன போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.
2. ஈரான்- ஈராக் போரை முடிவுக்கு கொண்டுவந்தது.

**3. அணு சோதனை தடை சட்டம்**

1. 1963 ஆம் ஆண்டு – அணுசோதனை தடை சட்டத்தை நிறைவேற்றியது.
2. 1996 ஆம் ஆண்டு - தொடர் அணுசோதனை தடை சட்டத்தை நிறைவேற்றியது.

**4. சுற்றுச் சூழல் மாநாடு**

1992 ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோவில் - சுற்றுச்சூழல் மாநாட்டின் “அறிக்கை 21”-ஐ அனைத்து நாடுகளும் ஏற்றன.

**5. அமைதிப் படை**

ஐ.நா. தனது அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி, சூயஸ் கால்வாய் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வந்தது.

**6. பெண்கள் நலன்**

ஐ.நாவின் பெண்கள் மேம்பாட்டு நிதி, பெண்களின் முன்னேற்றத்திற்காக பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தி 100 நாடுகளில் பெண்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்காக பாடுபடுகிறது.

**7. சிக்கலை தீர்த்தல்**

1. கொரியப் போரை முடிவுக்கு கொண்டு வந்தது
2. ஆப்கான்-ரஷ்யப் பிரச்சினையை தீர்த்தது
3. வியட்நாம் போரை முடிவுக்கு கொண்டு வந்தது ஐ.நாவின் முக்கிய சாதனைகளாகும்.

(இ) **நீதிக்கட்சி**

**1. நீதிக்கட்சியின் தோற்றம்**

1. நீதிக்கட்சி பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக தொடங்கப்பட்ட சமூக இயக்கமாகும்.
2. இக்கட்சி 1916ல் எ.எம்.நாயர் மற்றும் தியாகராய செட்டியர் ஆகியோரால் சென்னை மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

**2. நீதிக் கட்சியின் சாதனைகள்**

1. 1921ல் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்கியது.
2. 1924ல் பொதுப் பணி தேர்வாணயம் மாற்றியமைக்கப்பட்டது.

3. 1925 ஆந்திரா பல்கலைக்கழகமும், 1929 அண்ணாமலை பல்கலைக்கழகமும் தொடங்கப்பட்டன.
4. 1926ல் இந்து சமய அறநிலைய சட்டம் கொண்டுவரப்பட்டது.
5. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
6. பெண்கள் வன் கொடுமை தடை சட்டம் மற்றும் தொழிலாளர் நல சட்டங்கள் இயற்றப்பட்டன.
7. ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
8. சென்னையில் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
9. ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கமளித்தது.
10. 1921 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

49. (அ) **பஞ்சசீலம் மற்றும் அணிசேரா கொள்கை**

**பஞ்ச சீலம்**

பிரதமர் ஜவஹர்லால் நேரு அமைதிக்காக பின்பற்றிய ஐந்து அம்ச கொள்கைகள் - பஞ்சசீலம் என்றழைக்கப்படுகிறது.

1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதித்தல்
2. எந்த ஒரு நாடும் பிறநாட்டை தாக்கக் கூடாது.
3. எந்த ஒரு நாடும் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது.
4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

**அணிசேராக் கொள்கை**

1. இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகம் அமெரிக்கா, ரஷ்யா தலைமையில் உலக நாடுகள் பிரிந்து பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.
2. இந்தியா, இரு வல்லரசு நாடுகளுடன் சேராமல் நடுநிலைமை வகிப்பது, அணிசேராக்கொள்கை.
3. இவ்விரு அணிகளுக்கியடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றிய சமயத்தில் இந்தியா அவற்றைத் தீர்த்து வைத்து உலகில் அமைதியை நிலைநாட்டி வருகிறது.

(ஆ) தேசிய ஒருமைபாடு

**1. புவியியல் அமைப்பு**

மக்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, உடைகள் போன்றவை புவியியல் அமைப்பு ஒட்டி வேறுபடுகின்றன.

**2. பாரம்பரியம்**

மனிதாபிமானம், சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, சகிப்புத் தன்மை போன்ற இந்திய பாரம்பரியம் இந்தியர்களை ஒற்றுமையுடன் வாழ வழி செய்கிறது.

**3. தேசிய சின்னங்கள்**

தேசிய சின்னங்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.

**4. இந்திய கலாச்சாரம்**

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்கேற்ப இந்திய ஒற்றுமை சிந்து சமவெளி காலத்திலிருந்து இந்திய கலாச்சாரத்தை நிலைநாட்ட உதவி வருகிறது.

**5. பாரத தாயின் பிள்ளைகள்**

அனைவரும் பாரத தாயின் பிள்ளைகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு, இந்தியர்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற எண்ணம் போன்றவை இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

(இ) **நுகர்வோர் உரிமைகள்**

**1. பொருட்களை பற்றிய அறிவு**

பொருட்களின்

1. தரம்
2. அளவு
3. தன்மை
4. அதனுடைய உண்மை நிலை
5. விலை ஆகியவற்றை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும்.

**2. நியாயமான விலை**

பொருள்கள் நியாயமான விலையில் இருக்கிறதா, இல்லையா என்று சொல்வதற்கு உரிமை பெற்றுள்ளனர்.

**3. தீர்வு**

நுகர்வோரின் நலன்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும்.

**4. தகவல் அறியும் சட்டம்**

2005 அக்டோபர் 12ம் நாள் தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**5. அடிப்படை உரிமை**

இதன் மூலம். மக்கள் அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்து கொள்கின்றனர்.
இது அவர்களின் அடிப்படை உரிமையாகும்.

6. **எதிர்ப்பினை தெரிவிக்கும் உரிமை**
நுகர்வோரின் பொருட்கள் அவர்களது வாழ்க்கைக்கு அவர்களது சொத்திற்கும் பாதுகாப்பினை ஏற்படுத்தும் வேளையில் அவர்கள் அந்தப் பொருட்களைக் குறித்தும் தங்களது எதிர்ப்பினைக் தெரிவிக்கும் உரிமை உள்ளது.

50. (அ) **இமய மலையின் முக்கியத்துவம்**

1. **இயற்கை அரண்**
இந்தியாவின் வடக்கே உள்ள இமயமலை இயற்கை அரணாக அமைந்துள்ளது.
2. **அன்னிய படையெடுப்பு தடுப்பு**
சீனா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற அன்னிய படையெடுப்புகள் இந்தியாவில் எளிதில் நுழைவதை தடுக்கிறது.
3. **மழை பொழிவு**
தென்மேற்கு பருவகாற்றை தடுத்து, மழை பொழிவையும், பனிப்பொழிவையும் தருகிறது.
4. **மலை வாழிடங்கள்**
மலை வாழிடங்களான முசௌரி, நைனிடால், இமாச்சல், குல்மார்க் போன்றவை இங்கு அமைந்துள்ளன.
5. **புனித இடங்கள்**
அமர்நாத், கேதார்நாத், பத்ரிநாத், வைஷ்ணவிதேவி கோயில் போன்ற புனித இடங்களும் இங்கு அமைந்துள்ளன.
6. **ஆறுகள் உற்பத்தி**
கங்கை, யமுனை, சிந்து, பிரம்மபுத்திரா போன்ற நதிகள் இமய மலையில் உற்பத்தியாகின்றன.

(ஆ) **நச்சுப்புகை**

**நச்சுப் புகை**

புகையும், மூடுபனியும் கலந்த கலவையே நச்சுப்புகை எனப்படும்.

**விளைவுகள்**

1. **வளிமண்டலம்**
புகையால் வளிமண்டலம் இருட்டாகி பார்வை குறைவையும், மந்தமான சூழ்நிலையையும் உண்டாக்கும்.
2. **முக்கிய காரணி**
வாகனப் புகை, தீ, கழிவு மேலாண்மை, எண்ணெய் உற்பத்தி, தொழிற்சாலை கழிவு, வா்ணக் கலவை, வா்ணப்பூச்சு ஆகியவை முக்கிய காரணிகளாகும்.
3. **மாசுக்கள்**
நச்சுப் புகையில் உள்ள மாசுக்கள் கார்பன் மோனாக்ஸைடு, தூசு, அழுக்குத் துகள்கள், ஓசோன் போன்றவையாகும்.
சூரிய ஒளியில் ஹைட்ரோ கார்பன் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடை சேர்வதால் இது உருவாகிறது.
4. **நோய்கள்**
நச்சுப்புகையினால் நுரையீரல் நோய் மற்றும் நிமோனியா ஏற்படுகிறது.
5. **பாதிப்பு**
நச்சுப் புகை காற்றில் பரவி நகரம் மற்றும் கிராமங்களை பாதிக்கின்றன.
வேளாண்மையும் பாதிக்கபப்படுகிறது.

(இ) **தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் பகுதிகள்.**

தொலை நுண்ணுணவா்வு நுட்பத்தின் தொகுதிகள் நான்கு பகுதிகளை கொண்டுள்ளது. அவை
1. இலக்கு 2. ஆற்றல் மூலம் 3. பிரதிபலிக்கும் வழி 4. உணா்வி ஆகியவை ஆகும்.

1. **இலக்கு**
விரும்பும் ஒரு பொருளைப் பற்றிய தகவல்களைப் பெற புவியின் பொருட்களை நேரடியாக தொடா்பு கொள்ளாமல் தகவல்களை சேகரித்து பதிவு செய்வதாகும்.
2. **ஆற்றல் மூலம்**
ஆற்றல் மூலமான சூரியன் மின்காந்த ஒளிக்கற்றைகளை புவிக்கூறுகளுக்கு வழங்குகிறது.
இவை இரு வகைகளாக பிரிக்கப்படுகிறது.
1. இயற்கை முறை 2. செயற்கை முறை
   1. **இயற்கை முறை :**
   சூரிய ஒளியில் பொருட்களின் பிரதிபலிப்பு

2. **செயற்கை முறை :**
ரேடார் கருவி மூலம் பெறப்படும் ஒலியை பிரதிபலிப்பது.

3. **பிரதிபலிக்கும் வழி**
   1. இலக்கின் பண்பையும், பிரதிபலிப்பையும் பொறுத்து மின்காந்த அலைகள் இலக்குடன் செயல்படுகின்றன.
   2. புவிக்கூறுகளின் மீது விழும் சூரிய ஒளியானது மீண்டும் வளிமண்டலத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறது. இவ்வாறு பிரதிபலிப்பின் மூலம் இலக்கைப் பற்றி தகவல்கள் உணர்விகளுக்கு அனுப்பப்படுகிறது.

4. **உணர்வி**
உணர்விகள் பெறுகின்ற ஆற்றலை அடிப்படையாக் கொண்டு துரித உணர்விகள் மற்றும் மந்த உணர்விகள் என வகைப்படுத்தப்படுகின்றன.
   1. **மந்த உணர்விகள் :** இயற்கையான வெப்ப ஆற்றல் பிரதிபலிப்பதை கண்டறிகிறது.
   **எ.கா :** சூரிய ஒளியில் புகைப்படக் கருவி மூலம் படம் படிப்பது.
   2. **துரித உணர்விகள் :**
   இலக்கிலிருந்து குறியீடுகளை வெளிப்படுத்தி பிரதிபலித்து ஆற்றலையும் அளக்க செய்கிறது.
   **எ.கா :** ரேடார் கருவி.

## (அ) பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்கள்

1. வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துதல்
2. வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல்.
3. வறுமையை ஒழித்தல்
4. கிராமபுற கட்டமைப்பு வசதிகளை பெருக்குதல்.
5. மின்சாரம், உரங்களுக்காகன மானியத்தை குறைத்தல்.
6. தொடக்கக் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்.
7. சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
8. நீர்பாசனம், கிராம மின்மயமாதல், கிராம சாலைகள் மேம்படுத்த அரசு முதலீட்டை அதிகரித்தல்

(ஆ) **தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்கள்**

1. **அனல்மின் சக்தி உற்பத்தி**
   1. எண்ணூர்
   2. தூத்துக்குடி
   3. நெய்வேலி
   4. மேட்டூர் ஆகிய இடங்களில் நிலக்கரியைக் கொண்டு அனல் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.
2. **நீர் மின் நிலையங்கள்**
   1. மேட்டூர்
   2. குந்தா
   3. பெரியார் அணை
   4. கோதையாறு அணை
   5. பைக்காரா
   6. சிங்காரா
   7. மாயாரில் நீர் மின் நிலையங்கள் அமைந்துள்ளன.
3. **அணுமின் சக்தி உற்பத்தி**
   1. கல்பாக்கம்
   2. கூடங்குளத்தில் அணுவிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.
4. **காற்று மின் சக்தி**
   1. கோயம்புத்தூர்
   2. கன்னியாகுமரி
   3. தூத்துக்குடி
   4. திருநெல்வேலி
   5. இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் காற்றிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.
5. **உயிரி பொருட்கள் எரிசக்தி**
   1. தருமபுரி
   2. நாமக்கல் மாவட்டங்களில் வேளாண் கழிவுப் பொருட்களிலிருந்து மரபு சாரா மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

(இ) நலம் நாடும் அரசின் பணிகள்

1. **பாதுகாப்பு சார்ந்த பணிகள்**
   1. ஒரு நாட்டில் அமைதி நிலவினால் மட்டுமே பொருளாதார முன்னேற்றம் அடைய இயலும்
   2. மக்களை அந்நிய படையெடுப்பு மற்றும் உள்நாட்டு கலவரங்களில் இருந்து பாதுகாக்க வேண்டும்

3. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது அரசின் முதன்மைப் பணியாகும்.

**2. நிர்வாகம் சார்ந்த பணிகள்**

1. மக்கள் பணியாற்றுவதற்கு சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை மூன்றும் அரசின் முக்கிய அலகுகளாக செயல்படுகிறது.
2. மக்களுக்கு நிர்வாகம் மூலம் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

**3. சமூக பாதுகாப்பு சார்ந்த பணிகள்**

1. அரசானது சமூக பாதுகாப்பு பணிகளாக
2. ஏழைகள்
3. உடல் நலமற்றோர் மற்றும்
4. வேலையற்றோர்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கிறது.
5. இதனால் சமுதாயத்தில் நலிவுற்றோர் பயனடைகின்றனர்.

**4. பொருளாதாரம் சார்ந்த பணிகள்**

1. வேளாண்மை, வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.
2. வங்கித் துறையின் செயல்பாடுகள் பொருளாதார வளர்ச்சியை மையமாக கொண்டு நடைபெறுகின்றன.

51. காலக்கோடு 1900 – 1920 (ஏதேனும் 5 மட்டும்)

**1905 – வங்கப்பிரிவினை**

**1906 – முஸ்லீம் லீக் தோற்றம்**

**1907 – சூரத் பிளவு**

**1909 – மிண்டோ-மார்லி சீர்திருத்த சட்டம்**

**1911 – வங்க பிரிவினை நீக்கம்**

**1914 – முதல் உலகப்போர் துவக்கம்**

**1916 – லக்னோ ஒப்பந்தம், தன்னாட்சி இயக்கம்**


**1917 – ஆகஸ்டு அறிக்கை**

**1918 – முதல் உலகப்போர் முடிவு**


**1919 – மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த சட்டம், ஜாலினன் வாலாபாக் படுகொலை, ரௌலட் சட்டம்**


**1920 – ஒத்துழையாமை இயக்கம்**

52. அ. ஆசியா வரைபடம்



ஆ. . இந்தியா வரைபடம்


53- b.
மீரட்
அலகாபாத்
பாட்னா
பாண்டிச் சேரி
Scale 1 : 17,000,000 1cm = 170 kms
Lambert Conical Orthomorphic Projection




Thanks to: waytosuccess guide

Muneeswaran Sir

Sivagangai DT

பே. சீனிவாசன்
பட்டதாரி ஆசிரியர் (வரலாறு)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 99943 94610
மின் அஞ்சல் : srinivasanb2401@gmail.com